# சத்தியம்

## சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன்

பிரம்மர்ஷி பத்ரிஜி அவர்களின் வழியில் தியானம், சைவ உணவு, பிரமிடு ஆற்றல் மற்றும் ஆன்மிக அறிவியல் பற்றிய செய்திகளை, உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் பரப்புவதற்காக "சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன்" நிறுவப்பட்டுள்ளது.

## "தியானம் செய்யுங்கள்"

தியானம் ஆன்மிக வாழ்க்கைக்கு இன்றியமையாத பாதை,
தியானம் ஆன்மிகத்தின் ஆதியும், அந்தமும் ஆகும்.
குருவானவர் ஒன்றே ஒன்று மட்டும்தான் சொல்வார். அது ..
"தியானம் செய்".
ஒரு மாணவன் ஒன்றே ஒன்று மட்டும் தான் செய்ய வேண்டும்.
அதாவது, "தியானப் பயிற்சி".
தியானம் செய்வதற்கு கண்டிப்பாக நேர்மை தேவை,
தியானம் செய்வதற்கு தீவிரத் தன்மை மிகவும் இன்றியமையாதது.
நாம் எந்த அளவுக்கு தியானம் செய்கிறோமோ
அதே அளவுக்கு எளிமையானவராகிறோம்,
நாம் மிகவும் சக்தி வாய்ந்தவர் ஆகிறோம்,
இறந்த காலம், எதிர்காலம் என்று எதுவும் நம்மை பாதிப்பதில்லை,
நாம் எப்போதும் உதவிக்கரம் நீட்ட ஆர்வமாக இருக்கிறோம்,
இயற்கையாகவே எல்லா ஜீவராசிகளிடமும்
கருணை ஏற்படுகிறது.
"தியானம் செய்யுங்கள்",
இது ஒன்றுதான் ஆன்மிக ஆர்வம் உள்ளவர்களுக்கான செய்தி.
-பிரம்மர்ஷி பத்ரிஜி, நிறுவனர்: பி.எஸ்.எஸ்.எம்



## பிரம்மர்ஷி பத்ரிஜி

1979 ஆம் ஆண்டு பிரம்மரிஷி பத்ரிஜி அவர்கள் ஆனாபானாசதி தியானத்தின் மூலம் ஆன்மிக சாதனைகள் புரிந்து, ஞானம் அடைந்தார். மார்க்கெட்டிங் நிர்வாகியாக அவர் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். மத அடையாளங்களிலிருந்து விடுபட்டு, அறிவியல் அணுகுமுறையின் மூலம் தியானம் மற்றும் சைவத்தை ஊக்குவிப்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். 1990 ஆம் ஆண்டில், தியானத்தை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கும், உலகளவில் ஆன்மிக விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும், P. S. S. M என்ற பிரமிடு ஆன்மிக இயக்கத்தை நிறுவினார். அவரது போதனைகள் மூச்சில் விழிப்புணர்வு மற்றும் பிரமிடு ஆற்றல் மூலம் சுய மாற்றத்தை வலியுறுத்துகின்றன.

## தியானம் செய்வோம் .. தியானம் கற்பிப்போம்

ஒவ்வொருவரும் விடுதலை, ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் அமைதியை விரும்புகிறார்கள்.
இதை அடைய, நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதல் விஷயம் ..
நாம் அனைவரும் ஒரு நோக்கத்துடன் பிறக்கின்றோம்.
நமது வாழ்க்கையின் நோக்கத்தை நாம் நிறைவேற்றும்போது, விடுதலை தொடர்கிறது.
நமது நோக்கத்தைக் கண்டறிய, நாம் ஒவ்வொரு நாளும் தியானம் செய்ய வேண்டும்.
பூமியில் வாழ்க்கை நேரத்தால் பிணைக்கப்பட்டுள்ளது,
இந்த நேரத்தை புத்திசாலித்தனமாக பயன்படுத்துவது நமது கடமையாகும்,
தியானம் செய்யுங்கள், ஆன்மிக ஞானத்தைப் பெறுங்கள் மற்றும்
அன்னை பூமியை ஆன்மிகமாக்குவதில் உங்கள் பங்களிப்பைத் தாருங்கள் ..
நாம் தியானம் செய்து, சைவ உணவைப் பின்பற்றும்பொழுது,
இயற்கையாகவே நாம் மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அமைதியை அனுபவிக்கின்றோம்.
எனவே, பூமியில் உள்ள அனைவரும் தியானப் பயிற்சி செய்து,
தியானத்தை கற்பிக்க வேண்டும்.
தியானம் செய்வோம் .. அனைவருக்கும் தியானம் கற்பிப்போம்.

**- பாலாஜி டோன்தி**

மெடிடேஷன் கோச், மேனேஜிங் டிரஸ்ட்டி, சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன்

## ஃபவுண்டேஷனில் நடைபெற்ற நிகழ்ச்சி நிரல்கள்







**அக்டோபர் 27,2024: செங்கல்பட்டில் போகர் பிரமிடு தியான மையம் திறப்பு விழா**

தியானம், சைவ உணவு, பிரமிடு ஆற்றல் மற்றும் ஆன்மிக அறிவியல் பற்றிய விழிப்புணர்வை பரப்பும் நோக்கத்துடன், செங்கல்பட்டு நகரில் ஒரு புதிய தியான மையம் தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், தியான மையங்களை நிறுவுவதற்கான எங்கள் பயணத்தின் தொடக்கத்தை இது குறிக்கிறது.






**16 நவம்பர் 2024: சத்ய தரிசனம், நிகழ்ச்சி-1, மற்றும் அன்னதானம்**

சத்திய தரிசனத்தின் முதல் நிகழ்ச்சியில் போகர் பிரமிடு தியான மையத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஒவ்வொரு சனிக்கிழமையும் 90 நிமிட பிரத்யேக தியானம் மற்றும் சத்சங்கத்தைத் தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வகுப்புக்கு தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோன்தி அவர்கள் தலைமை தாங்கினார். "தியான அறிவியல்" என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெற்றது, 24 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.






**23 நவம்பர், 2024: சத்ய தரிசனம், நிகழ்ச்சி-2, மற்றும் அன்னதானம்**

சத்திய தரிசனத்தின் இரண்டாவது நிகழ்ச்சியில் தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோன்தி அவர்களால் நடத்தப்பட்டது, இதில் "உலகெங்கிலும் உள்ள ஆன்மிக விஞ்ஞானிகள்" என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெற்றது. ஆழ்ந்த தியானம் செய்தோம் மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொண்டோம்.






**7 டிசம்பர், 2024: சத்ய தரிசனம், நிகழ்ச்சி-3, மற்றும் அன்னதானம்**

சத்திய தரிசனத்தின் மூன்றாவது நிகழ்ச்சியில் தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோன்தி அவர்களால் நடத்தப்பட்டது, இதில் "பதஞ்சலி தியான சாஸ்திரம்" என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெற்றது. ஆழ்ந்த தியானம் செய்தோம் மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொண்டோம்.






**14 டிசம்பர், 2024: சத்ய தரிசனம், நிகழ்ச்சி-4, மற்றும் அன்னதானம்**

சத்திய தரிசனத்தின் நான்காவது நிகழ்ச்சியில் தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோன்தி அவர்களால் நடத்தப்பட்டது, இதில் "புத்தரின் நான்கு உன்னத உண்மைகள்" என்ற தலைப்பில் ஒரு சத்சங்கம் நடைபெற்றது. ஆழ்ந்த தியானம் செய்தோம் மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொண்டோம்.






**21 டிசம்பர், 2024: சத்ய தரிசனம், நிகழ்ச்சி-5, மற்றும் அன்னதானம்**

சத்திய தரிசனத்தின் ஐந்தாவது நிகழ்ச்சியில் தியானப் பயிற்சியாளர் திரு.பாலாஜி டோன்தி அவர்களால் நடத்தப்பட்டது, இதில் "பிரம்ம விஹாரங்கள்" என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெற்றது. ஆழ்ந்த தியானம் செய்தோம் மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொண்டோம்.






**30 டிசம்பர் 2024: சத்ய தரிசனம், நிகழ்ச்சி-6, மற்றும் அன்னதானம்**

சத்திய தரிசனத்தின் ஆறாவது நிகழ்ச்சியில் பிரமிடு மாஸ்டர் திருமதி து. விசாலாக்ஷி அவர்களால் "தியானத்தின் நன்மைகள்" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. ஆழ்ந்த தியானம் செய்தோம் மற்றும் ஞானத்தைப் பகிர்ந்து கொண்டோம்.

## ஃபவுண்டேஷன் பற்றிய விவரம்

"சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன்" பிரம்மர்ஷி பத்ரிஜியின் வழிகாட்டுதலின்படி நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளை தியானம், ஆன்மிக அறிவியல் மற்றும் பிரமிடு சக்தியின் விழிப்புணர்வு ஆகியவற்றைப் பரப்புவதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. எந்த கட்டணமும் இல்லாமல் அனைவருக்கும் தியானம் கற்பித்தல், தியான சக்தியை அதிகரிப்பதற்கு பிரமிடு கட்டுவதின் அவசியம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பிரமிடு இயக்கங்களுக்கு இலவச தியான நிகழ்ச்சி நடத்துவதற்கு உதவுதல், ஆன்மிக புத்தகங்கள் வெளியிடுதல் மற்றும் ஆன்மிக தேடல் உள்ளவர்களுக்கு ஆன்மிகப் புத்தகத்தின் பயனை இலவசமாக அளித்தல் இதுவே எங்கள் பணி.

நாங்கள் சுறுசுறுப்பான மற்றும் புத்தி கூர்மையான வாழ்க்கை வாழ, சைவ உணவுதான் சிறந்தது என ஊக்குவிக்கின்றோம். தியானிகளுக்கும், யோகிகளுக்கும் அன்னதான சேவை செய்வதற்கும் தீவிரமாக ஊக்குவிக்கின்றோம். விஞ்ஞான ஆன்மிகத்தின் மூலம், சுய மாற்றம் மற்றும் உலகளாவிய மாற்றத்திற்கு வழிவகுக்கும். இதன்மூலமாக இணக்கமான உலகத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம். இந்த ஆன்மிக அறக்கட்டளையில் எங்களுடன் இணையுங்கள். தியானம் செய்து, விழிப்புணர்வு பெற்று, சிறந்த பூமியை உருவாக்குவோம்.

## தியான அனுபவங்கள்



பத்ரிஜிக்கு நன்றி! என் பெயர் இல.பா.ஸ்ரீவித்யா. நான் சென்னையில் வசிக்கின்றேன். மார்ச் 2024 இல், ஒரு தியான நிகழ்ச்சியில் செம்பு பிரமிடு வாங்கி, அதை பயன்படுத்த எனக்கு வாய்ப்பு கிடைத்தது. நான் என் வீட்டில் தியானம் செய்த பிறகு, குடிநீரில் அந்த பிரமிடை வைக்கிறேன். எனது குடும்பத்தில் உள்ள அனைவரின் நடத்தையில் நேர்மறையான மாற்றங்களை நான் கவனித்தேன். எல்லோரும் அமைதியாகிவிட்டனர், எங்கள் வீடு மிகவும் அமைதியாக இருக்கின்றது. இந்த மாற்றம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. பிரமிடுகள் உண்மையில் நேர்மறை ஆற்றலை உருவாக்கும் சக்தியைக் கொண்டுள்ளன!

- இல. பா. ஸ்ரீவித்யா. சென்னை



பத்ரிஜிக்கு நன்றி! என் வாழ்க்கை இப்பொழுது அமைதியாக இருக்கின்றது. நான் கடந்த ஒரு மாதமாக செங்கல்பட்டில் உள்ள போகர் பிரமிடு தியானம் மையத்திற்கு சென்று தியானம் செய்து வருகிறேன். அது என் வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் தெளிவையும் கொண்டு வந்துள்ளது. நான் இப்பொழுது தினமும் அதிகாலை 5 மணிக்கு எழுந்து, எனது செயல்பாடுகள் மற்றும் செலவுகள் குறித்து தினமும் எழுதும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டேன். நான் அதிக சுறுசுறுப்பாக உணர்கின்றேன். நான் கவனத்துடன் தேவையானபோது பேசுகிறேன், எந்த தேவையற்ற உரையாடல்களிலும் ஈடுபடுவதில்லை. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தூக்கமின்மையால் பாதிக்கப்பட்டேன். நான் தியானம் செய்யத் தொடங்கியவுடன், என்னால் நிம்மதியாக தூங்க முடிகின்றது. என் மனம் அமைதியாக இருக்கிறது மற்றும் எதிர்காலத்தைப் பற்றி நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

அ. ந ராமதாஸ், செங்கல்பட்டு,

## அன்னதானம் ஒரு புனிதமான செயல்

நமது பண்டைய மரபுகளின்படி, அன்னதானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, குறிப்பாக ஆன்மிக ஆர்வலர்கள் மற்றும் அருட்தொண்டர்களுக்கு, அன்னதானத்துடன், தியான தானம், சேவை தானம் மற்றும் ஞான தானம் போன்ற அனைத்து செயல்களும் மிகவும் சிறந்தவை.

தானங்களில் அன்னதானம் மிகப் பெரிய நன்கொடை!

அன்னதானம் என்பது நன்கொடைக்கான தூய்மையான வடிவமாகும்.

இலவச தியான வகுப்புக்கு
**போகர் பிரமிடு தியான மையம்,**
31/A, கவுன்சிலர் தேவராஜினார் தெரு, வேதாச்சலம் நகர்,
செங்கல்பட்டு-603001 | வருகை நேரம் : 6am-8am & 5pm-7pm
தொலைபேசி : 9176500063, 8122828800

Buy Pyramids, Crystals and Spiritual Books online at
**Satyam eStore - www.satyamestore.com**
Read all books written by Patriji online today !
Use Coupon Code : INAUGURALOFFER to avail 25% discount
Phone : 9994005244